# T.P.M Sunday School



## Standard : 1



பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; நீதி:22:6

# TPM ஞாயிறுபள்ளி
# 1-ம் வகுப்பு பாடங்கள்

## I. பாடங்கள்

1. சிருஷ்டிப்பின் வரலாறு
2. ஆதாமும் ஏவாளும்
3. ஆதாமும் ஏவாளும் ஏதேனை இழத்தது
4. காயீனும் ஆபேலும்
5. ஏனோக்கு
6. நோவாவும் பேழையும் (பகுதி I)
7. நோவாவும் பேழையும் (பகுதி II)
8. பாபேல் கோபுரம்
9. ஆபிரகாமும் லோத்தும்
10. ஆபிரகாம் லோத்தை விடுதலையாக்கினது
11. யோவான்ஸ்நானனின் பிறப்பு
12. கர்த்தராகிய இயேசுவின் பிறப்பு
13. பலாகனாகிய இயேசு தேவாலயத்திற்குக் கொண்டுபோகப்பட்டது
14. சாஸ்திரிகள் பலாகனாகிய இயேசுவைத் தரிசித்தது
15. பாலகனாகிய இயேசு எகிப்துக்குக் கொண்டுபோகப்பட்டது
16. எருசலேமில் இளைஞரான இயேசு
17. கர்த்தராகிய இயேசு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டது (யோவான்ஸ்நானனின் ஊழியம்)
18. கர்த்தராகிய இயேசு வனாந்தரத்தில் சோதிக்கப்பட்டது
19. கானாவூர் கலியாணம்
20. கர்த்தராகிய இயேசு தேவாலயத்தைச் சுத்திகரித்தது

MEMORY VERSES (STD 1)

| L.No | Verse |
|---|---|
| 1 | ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். |
| 2 | தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்.அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். |
| 3 | மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது. |
| 4 | உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். |
| 5 | ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருக்கையில், காணப்படாமற் போனான். தேவன் அவனை எடுத்துக் கொண்டார். |
| 6 | தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்˙ எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே. |
| 7 | கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்˙ |
| 8 | மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு: அதின் முடிவோ மரண வழிகள். |
| 9 | எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள். |
| 10 | நன்மைசெய்யும்படி உனக்குத் திராணியிருக்கும் போது, அதைச் செய்யத் தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே. |
| 11 | அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு. |
| 12 | பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார். |
| 13 | உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது. |
| 14 | இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள். |
| 15 | உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார். |
| 16 | இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகதிகமாய் விருத்தியடைந்தார். |
| 17 | நீதியின் பாதையில் ஜீவன் உண்டு. |
| 18 | பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான் |
| 19 | சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும், கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங்குறைவுபடாது. |
| 20 | இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள். |

வகுப்பு : 1

பாடம்-1

# சிருஷ்டிப்பின் வரலாறு

(ஆதியாகமம் அதிகாரம் 1)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

ஆதியாகமம் 1 : 1

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்.

**II** *போதனை :* (2 Marks)

மனிதனுக்குத் தேவையான யாவற்றையும் தேவன் சிருஷ்டித்தார். இது, தேவன் நம்பேரில் எவ்வளவாய்க் கரிசனையுள்ளவராயிருக்கிறார் என்பதைக் காண்பிக்கிறது.

**III** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி :* (2 Marks)

**1.** முதலாம் நாள் தேவன் எதை உண்டாகக் கடவது என்றார்?
வெளிச்சம் (பகல், இரவு) (ஆதி. 1 : 3 – 5)

**2.** வெளிச்சத்தையும் இருளையும் வெவ்வேறாகப் பிரித்தது யார்?
தேவன் (ஆதி 1 : 4)

**3.** தேவன் வெளிச்சத்திற்கு என்ன பேரிட்டார்?
பகல் (ஆதி. 1 : 5)

**4.** தேவன் இருளுக்கு என்ன பேரிட்டார்?
இரவு (ஆதி. 1 : 5)

**5.** இரண்டாம் நாள் தேவன் எதை உண்டாக்கினார்?
ஆகாயவிரிவு (ஜலத்தைப் பிரித்தல்) (ஆதி. 1 : 6)

**6.** ஜலத்தினின்று ஜலத்தைப் பிரிக்கும்படி தேவன் எதை உண்டாக்கினார்?
ஆகாய விரிவு (ஆதி. 1 : 6)

**7.** தேவன் ஆகாயவிரிவுக்கு என்ன பேரிட்டார்?
வானம் (ஆதி. 1 : 8)

**8.** தேவன் வெட்டாந்தரைக்கு என்ன பேரிட்டார்?
பூமி (ஆதி. 1 : 10)

**9.** தேவன் ஜலத்திற்கு என்ன பேரிட்டார்?
சமுத்திரம் (ஆதி. 1 : 10)

**10.** மூன்றாம் நாள் தேவன் எதை உண்டாக்கினார்?
புல் , விதையைப் பிறப்பிக்கும் தாவரங்கள், கனிதரும் விருட்சங்கள் (ஆதி. 1 : 11)

**11.** நான்காம் நாள் எது உண்டாகக்கடவது என்று தேவன் கட்டளையிட்டார்?
சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள். (ஆதி. 1 : 16)

12. பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் உண்டாகத்தக்கதாக தேவன் எதை உண்டாக்கினார்? அதை எங்கே வைத்தார்?
   1. சுடர்கள்  2. வானம் என்கிற ஆகாயவிரிவில் வைத்தார்.. (ஆதி. 1 : 14)

13. அடையாளங்களுக்காகவும், காலங்களையும் நாட்களையும் வருஷங்களையும் குறிக்கிறதற்காகவும் தேவன் எதை உண்டாக்கினார்?
   சுடர்கள் (ஆதி. 1 : 14)

14. பகலை ஆளும்படி தேவன் எதை உண்டாக்கினார்?
   பெரிய சுடர் (சூரியன்) (ஆதி. 1 : 16)

15. இரவை ஆளும்படி தேவன் எவைகளை உண்டாக்கினார்?
   1. சிறிய சுடர் (சந்திரன்)  2. நட்சத்திரங்கள் (ஆதி. 1 : 16)

16. தேவன் வானம் என்கிற ஆகாயவிரிவிலே ஏன் சுடர்களை வைத்தார்?
   1. பூமியின் மேல் பிரகாசிக்கவும்
   2. பகலையும், இரவையும் ஆளவும்
   3. வெளிச்சத்துக்கும் இருளுக்கும் வித்தியாசம் உண்டாக்கவும்
   (ஆதி. 1 : 17 , 18)

17. ஐந்தாம் நாள் தேவன் எதை உண்டாக்கினார்?
   தண்ணீரில் நீந்தும் ஜீவ ஜந்துக்கள், பறவைகள் , மகா மச்சங்கள்
   (ஆதி. 1 : 20 , 21)

18. தேவன் ஆறாம் நாள் எதை உண்டாக்கினார்?
   காட்டு மிருகங்கள், நாட்டு மிருகங்கள், ஊரும் பிராணிகள், மனுஷன்.
   (ஆதி. 1 : 25, 27, 31)

19. தேவன் தமது சாயலாகவும், தமது ருபத்தின்படியேயும் யாரை சிருஷ்டித்தார்?
   மனுஷன் (ஆதி. 1 : 26)

20. சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளும்படி தேவன் யாரை சிருஷ்டித்தார்?
   மனுஷன் (ஆதி. 1 : 26)

21. தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்த போது அது எவ்வாறிருந்தது?
   மிகவும் நன்றாயிருந்தது. (ஆதி. 1 : 31)

***************

# ஆதாமும் ஏவாளும்

(ஆதியாகமம் 1 : 26, 27)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

ஆதியாகமம் 1 : 27

தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார். அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்..

**II** *போதனை :* (2 Marks)

தேவன் மனுஷனைத் தம்முடைய சாயலாக உண்டாக்கினார். இது மனுஷன் எவ்வளவு மேன்மையான சிருஷ்டி என்பதை வெளிப்படுத்துகிறது..

**III** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி :* (2 Marks)

1. தேவன் மனுஷனை எவ்வாறு சிருஷ்டித்தார்?
   தமது சாயலின்படியேயும், தமது ருபத்தின்படியேயும் சிருஷ்டித்தார். (ஆதி. 1 : 26)
2. தேவன் மனிதனை எதினால் உருவாக்கினார்?
   பூமியின் மண்ணினால் (ஆதி. 2 : 7)
3. மனுஷன் எவ்வாறு ஜீவாத்துமாவானான்?
   தேவன் ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான். (ஆதி. 2 : 7)
4. தேவன் சிருஷ்டித்த முதல் மனிதன் எவ்வாறு அழைக்கப்பட்டான்?
   ஆதாம் (பாடத்திட்டம்)
5. மனிதன் வசிக்கும்படியாக தேவன் என்ன உண்டாக்கினார்?
   ஏதேனில் ஒரு தோட்டத்தை உண்டாக்கினார். (ஆதி 2 : 8)
6. சகல ஜீவ ஜந்துக்களுக்கும் பேரிட்டது யார்?
   ஆதாம் (ஆதி 2 : 19 , 20)
7. மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்று நினைத்தது யார்?
   தேவனாகிய கர்த்தர் (ஆதி. 2 : 18)
8. யார் தனிமையாயிருப்பது நல்லதல்ல?
   மனுஷன் (ஆதி. 2 : 18)
9. ஆதாமுக்கு ஏற்ற துணையை உண்டாக்கியது யார்?
   தேவனாகிய கர்த்தர் (ஆதி. 2 : 18)
10. தேவன் தாம் சிருஷ்டித்த எல்லாவற்றையும் பேரிடும்படி யாரிடத்தில் கொண்டு வந்தார்?
    ஆதாம் (ஆதி. 2 : 19)

11. தேவன் யாருக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார்?
ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார். (ஆதி. 2 : 21)

12. தேவன் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணி என்ன செய்தார்?
ஆதாமுடைய விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அதை மனுஷியாக உருவாக்கினார். (ஆதி. 2 : 22)

13. தேவன் மனுஷியை எதினால் உருவாக்கினார்?
மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கினார். (ஆதி 2 : 22)

14. ஆதாம் தேவன் உருவாக்கிய மனுஷிக்கு என்ன பேரிட்டான்?
ஏவாள் (ஆதி 3 : 20)

15. ஆதாமும், ஏவாளும் எங்கே ஒன்றாக வாசம் பண்ணினார்கள்?
ஏதேனில் (பாடத்திட்டம்)

16. நம்முடைய முற்பிதாக்கள் யார்?
ஆதாம், ஏவாள் (பாடத்திட்டம்)

************

# ஆதாமும் ஏவாளும் ஏதேனை இழந்தது

(ஆதி. 2 : 8, 9, 16, 17 ; அதி. 3)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

அப்போஸ்தலர் 5 : 29

மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது.

**II** *போதனை :* (2 Marks)

கீழ்ப்படியாத பிள்ளைகளைத் தேவன் தண்டிக்கிறார்.

**III** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி :* (2 Marks)

1. தேவன் ஆதாமையும் ஏவாளையும் சிருஷ்டித்து எங்கே வைத்தார்?
   ஏதேன் தோட்டத்தில் (ஆதி. 2 : 8)

2. அழகான விருட்சங்களால் நிறைந்திருந்த தோட்டம் எது?
   ஏதேன் தோட்டம் (ஆதி. 2 : 9)

3. ஏதேன் தோட்டத்தின் நடுவிலே இருந்த விருட்சங்கள் யாவை?
   1. ஜீவ விருட்சம்
   2, நன்மை தீமை அறியத்தக்க விருட்சம் (ஆதி. 2 : 9)

4. எந்த விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம் என்று தேவன் ஆதாமுக்கு கட்டளையிட்டார்?
   நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனி (ஆதி. 2 : 17)

5. நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசித்தால் என்ன சம்பவிக்கும் என்று தேவன் ஆதாமுக்கு கூறினார்?
   புசிக்கும் நாளில் சாவாய் என்றார். (ஆதி. 2 : 17)

6. நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிப்பதற்கு முன்பு ஆதாமும் ஏவாளும் எதினால் உடுத்துவிக்கப்பட்டிருந்தார்கள்?
   தேவ மகிமையினால் (பாடத்திட்டம்)

7. தேவனைக் காண்பதற்கும் அவரோட பேசுவதற்கும் சிலாக்கியம் பெற்றிருந்தவர்கள் யார்?
   ஆதாமும், ஏவாளும் (பாடத்திட்டம்)

8. நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கும்படியாக ஏவாளை சோதித்தது யார்?
   சாத்தான் (ஆதி. 3 : 4, 5)

9. நன்மை தீமை அறியத்தக்க கனியைப் புசித்தால் கண்கள் திறக்கப்படும் என்று ஏவாளிடம் கூறியது யார்?
   சாத்தான் (ஆதி. 3 : 5)

**10.** நன்மை தீமை அறியத்தக்க விருட்சம் , புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும் , புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டது யார்?
ஏவாள். (ஆதி. 3 : 6)

**11.** நன்மை தீமை அறியத்தக்க கனியை முதலாவது புசித்தது யார்?
ஏவாள் (ஆதி. 3 : 6)

**12.** நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை ஆதாமுக்கு கொடுத்தது யார்?
ஏவாள் (ஆதி. 3 : 6)

**13.** நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசித்த போது ஆதாமுக்கும் ஏவாளுக்கும் என்ன சம்பவித்தது?
1. அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டது.
2. தாங்கள் நிர்வாணிகள் என்று உணர்ந்தார்கள். (ஆதி. 3 : 7)

**14.** ஆதாமும் ஏவாளும் எதினால் தங்களுக்கு வஸ்திரங்களை உண்டு பண்ணினார்கள்?
அத்தியிலைகளைத் தைத்து தங்களுக்கு வஸ்திரங்களை உண்டு பண்ணினார்கள்.
(ஆதி. 3 : 7)

**15.** தேவனாகிய கர்த்தர் ஏதேன் தோட்டத்தில் எப்பொழுது உலாவினார்?
பகலில் குளிர்ச்சியான வேளையில் (ஆதி. 3 : 8)

**16.** தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி தோட்டத்தின் விருட்சங்களுக்குள் ஒளிந்துக் கொண்டவர்கள் யார்?
ஆதாமும், ஏவாளும் (ஆதி. 3 : 8)

**17.** தேவனாகிய கர்த்தருக்கு பயந்து ஆதாமும் ஏவாளும் எங்கே ஒளிந்து கொண்டார்கள்?
தோட்டத்தின் விருட்சங்களுக்குள் (ஆதி. 3 : 8)

**18.** தேவனாகிய கர்த்தர் ஆதாமிடம் என்ன கேட்டார்?
1. நீ எங்கேயிருக்கிறாய் ? (ஆதி. 3 : 9)
2. புசிக்க வேண்டாம் என்ற நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ என்று கேட்டார். (ஆதி. 3 : 11)

**19.** ஆதாமும் ஏவாளும் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாதபடியால் தேவன் அவர்களை என்ன செய்தார்?
ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்தி விட்டார். (ஆதி. 3 : 24)

**20.** ஜீவ விருட்சத்துக்குப் போம் வழியைக் காவல் செய்யும்படி தேவன் என்ன செய்தார்?
ஏதேன் தோட்டத்துக்குக் கிழக்கே கேருபீன்களையும் , வீசிக் கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத்தையும் வைத்தார். (ஆதி. 3 : 24)

*************

வகுப்பு : 1

பாடம்-4

# காயீனும் ஆபேலும்

(ஆதியாகமம் அதிகாரம் 4)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

2 கொரிந்தியர் 9 : 7
உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

**II** *போதனை :* (2 Marks)

தேவன் நம் இருதயத்தைப் பார்க்கிறார். நம் செய்கைகளைக் கவனிக்கிறார்.

**III** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி :* (2 Marks)

**1.** ஆதாமின் மூத்த குமாரன் யார்?
காயீன் (ஆதி. 4 : 1)

**2.** ஆதாமின் இளையகுமாரன் யார்?
ஆபேல் (ஆதி 4 : 2)

**3.** காயீன் என்ன செய்துசொண்டிருந்தான்?
நிலத்தைப் பயிரிடுகிறவனாயிருந்தான். (ஆதி. 4 : 2)

**4.** ஆபேல் என்ன செய்துகொண்டிருந்தான்?
ஆடுகளை மேய்க்கிறவனாயிருந்தான் (ஆதி. 4 : 2)

**5.** காயீன் கர்த்தருக்கு என்ன காணிக்கை கொண்டு வந்தான்?
நிலத்தின் கனிகளைக் கொண்டு வந்தான் (ஆதி. 4 : 3)

**6.** ஆபேல் கர்த்தருக்கு என்ன காணிக்கை கொண்டு வந்தான்?
மந்தையின் தலையீற்றுகளையும் கொழுமையானவைகளையும் கொண்டு வந்தான்.(ஆதி.4 : 4)

**7.** மிகச் சிறந்ததை கர்த்தருக்கு காணிக்கையாகக் கொடுத்தது யார்?
ஆபேல் (ஆதி. 4 : 4)

**8.** தேவன் யாருடைய காணிக்கையை அங்கீகரித்தார்?
ஆபேலையும் அவன் காணிக்கையையும் அங்கீகரித்தார். (ஆதி 4 : 4)

**9.** யாருடைய காணிக்கையை தேவன் அங்கீகரிக்க வில்லை?
காயீனையும் அவன் காணிக்கையையும் தேவன் அங்கீகரிக்கவில்லை (ஆதி. 4 : 5)

**10.** தேவன் தன்னுடைய காணிக்கையை அங்கீகரிக்கவில்லை என்று அறிந்து மிகவும் எரிச்சல் அடைந்தது யார்?
காயீன் (ஆதி. 4 : 5)

**11.** யாருடைய முகநாடி எரிச்சலினால் வேறுபட்டது?
காயீன் (ஆதி. 4 : 5)

**12.** காயீன் யாரைக் கொலை செய்தான்?
ஆபேல் (ஆதி. 4 : 8)

**13.** காயீன் ஆபேலை எங்கு வைத்து கொலை செய்தான்?
வயல்வெளியில் (ஆதி. 4 : 8)

14. உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே என்று காயீனிடம் கேட்டது யார்?
கர்த்தர் (ஆதி. 4 : 9)

15. உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே என்று கர்த்தர் காயீனிடம் கேட்ட போது அவன் என்ன மறுஉத்தரவு சொன்னான்?
நான் அறியேன் என் சகோதரனுக்கு நான் காவலாளியோ என்றான். (ஆதி. 4 : 9)

16. கர்த்தர் யாரை சபித்தார்?
காயீன் (ஆதி. 4 : 11)

17. காயீனை ஒருவரும் கொன்று போடாதபடி கர்த்தர் என்ன செய்தார்?
அவன் மேல் ஒரு அடையாளத்தைப் போட்டார் (ஆதி. 4 : 15)

18. காயீனை கொன்று போடுகிறவர்கள் மேல் எத்தனை பழி சுமரும் ?
ஏழு பழி (ஆதி. 4 : 15)

*************

வகுப்பு : 1

பாடம்-5

# ஏனோக்கு

(ஆதியாகமம் அதி 5 : 21 - 24 , எபிரெயர் 11 : 5)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

ஆதியாகமம் 5 : 24

ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருக்கையில், காணப்படாமற் போனான். தேவன் அவனை எடுத்துக் கொண்டார்.

**II** *போதனை* : (2 Marks)

நாம் தேவனோடு சஞ்சரிக்க விரும்ப வேண்டும்.

**III** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி* : (2 Marks)

**1.** ஏனோக்கு எத்தனை வருஷம் தேவனோடு சஞ்சரித்தான்?
முந்நூறு வருஷம் (ஆதி. 5 : 22)

**2.** தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருக்கையில் காணப்படாமற் போனவன் யார்?
ஏனோக்கு (ஆதி. 5 : 24)

**3.** ஏனோக்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்பு எப்படிப்பட்ட சாட்சி பெற்றிருந்தான்?
தேவனுக்குப் பிரியமானவன். (எபிரெயர். 11 : 5)

**4.** மரணத்தைக் காணாமல் எடுத்துக் கொள்ளப்பட்ட மனசாட்சி காலத்து பரிசுத்தவான் யார்?
ஏனோக்கு (ஆதி. 5 : 24)

**5.** ஏனோக்கை எடுத்துக் கொண்டது யார்?
தேவன் (ஆதி. 5 : 24)

**6.** ஏனோக்கு எத்தனை வயதாயிருக்கும்போது எடுத்துக் கொள்ளப்பட்டான்?
முந்நூற்று அறுபத்தைந்து (ஆதி. 5 : 22)

**7.** ஏனோக்கின் குமாரன் யார்?
மெத்தூசலா (ஆதி. 5 : 22)

************

வகுப்பு : 1

பாடம்-6

# நோவாவும் பேழையும் (பகுதி - 1)

(ஆதியாகமம் 6 : 5 - 22, 7 : 1 - 16)

**I** *<u>மனப்பாட வசனம் :</u>* (2 Marks)

<u>பிரசங்கி 12 : 13</u>

தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள் ; எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே.

**II** *<u>ஓரிரு வார்த்தைகளில் விடையளி :</u>* (2 Marks)

**1.** நோவா எப்படிப்பட்ட மனுஷனாயிருந்தான்?
நோவா நீதிமானும், உத்தமனுமாயிருந்து தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தான். (ஆதி. 6 : 9)

**2.** நோவாவின் காலத்திலிருந்த ஜனங்கள் எப்படிப்பட்டவர்களாயிருந்தார்கள்?
துன்மார்க்கரும், தேவனுக்குப் பயப்படாதவர்களுமாயிருந்தார்கள். (ஆதி. 6 : 5)

**3.** நோவாவின் காலத்திலிருந்த மனுஷனுடைய இருதயத்து நினைவுகளின் தோற்றம் எப்படியிருந்தது?
நித்தமும், பொல்லாததாயிருந்தது. (ஆதி. 6 : 5)

**4.** பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காக மனஸ்தாபப்பட்டது யார்?
கர்த்தர் (ஆதி. 6 : 6)

**5.** பூமியிலே மனுஷனை உண்டாக்கினது கர்த்தருடைய இருதயத்துக்கு எப்படிப்பட்டதாயிருந்தது?
விசனமாயிருந்தது. (ஆதி. 6 : 6)

**6.** யாருக்கு கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது?
நோவாவுக்கு (ஆதி. 6 : 8)

**7.** தேவன் யாரைக் காப்பாற்ற விரும்பினார்?
நோவாவையும் , அவன் குடும்பத்தையும் காப்பாற்ற விரும்பினார். (ஆதி. 6 : 8)

**8.** நோவாவிற்கு எத்தனை குமாரர்கள் இருந்தார்கள்? அவர்கள் யார்?
1. மூன்று குமாரர்கள்
2. சேம், காம், யாப்பேத் (ஆதி. 6 : 10)

**9.** நோவாவின் குடும்பத்தில் எத்தனை பேர் இருந்தார்கள்?
எட்டுபேர் (ஆதி. 6 : 10 , 18)

**10.** தேவன் மனுஷனை எதினால் அழிக்கத் தீர்மானித்தார்?
ஜலப்பிரளயத்தினால் (ஆதி. 6 : 17)

**11.** ஜலப்பிரளயத்திற்கு தப்பும்படி நோவாவை தேவன் என்ன உண்டாக்கச் சொன்னார்?
பேழை (ஆதி. 6 : 14)

12. நோவா எந்த மரத்தினால் பேழையை உண்டு பண்ணினான்?
கொப்பேர் (ஆதி. 6 : 14)

13. நோவா உண்டாக்கின பேழைக்கு எத்தனை தட்டுகள் இருந்தது?
மூன்று தட்டுகள் (ஆதி 6 : 16)

14. சகலவித மாம்சமான ஜீவன்களிலுமிருந்து எத்தனை ஜோடு ஜீவ ஜந்துகளை பேழையில் சேர்த்துக் கொள்ளும்படி தேவன் நோவாவுக்கு கட்டளையிட்டார்?
வகை ஒன்றுக்கு ஒவ்வொரு ஜோடு(ஆதி. 6 : 20)

15. தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் பேழையை செய்து முடித்தது யார்?
நோவா (ஆதி. 6 : 22)

16. ஜலப்பிரளயத்துக்குத் தப்பும்படி பேழைக்குள் பிரவேசித்தவர்கள் யார்?
நோவாவும், அவனுடைய மனைவியும், அவனுடைய மூன்று குமாரரும், குமாரரின் மனைவிகளும் பேழைக்குள் பிரவேசித்தார்கள். (ஆதி. 7 : 7)

17. நோவாவின் நாட்களில் பூமியின்மேல் எத்தனை நாள் பெருமழை பெய்தது?
நாற்பது நாள் இரவும் பகலும். (ஆதி. 7 : 12)

18. பேழையின் கதவை அடைத்தது யார்?
கர்த்தர் (ஆதி. 7 : 16)

.

************

வகுப்பு : 1

பாடம்-7

ஞாயிறு பள்ளி

# நோவாவும் பேழையும் (பகுதி - II)

(ஆதியாகமம் 7 : 17 - 24, 8 : 1 - 20)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

சங்கிதம் 121 : 7

கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார் ;

**II** *போதனை :* (2 Marks)

நாம் தேவனுக்குப் பயந்து அவருக்குக் கீழ்ப்படிந்தால் தேவன் நம்மை சகல ஆபத்துகளிலிருந்தும் விடுவிப்பார்.

**III** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி :* (2 Marks)

**1.** பூமியின் மேல் ஜலப்பிரளயம் உண்டான போது நோவா உண்டாக்கின பேழைக்கு என்ன சம்பவித்தது?
ஜலத்தின் மேல் மிதந்து கொண்டிருந்தது. (ஆதி. 7 : 18)

**2.** பூமியின் மேல் ஜலம் பெருகினபோது, சகல ஜனங்களுக்கும் என்ன சம்பவித்தது?
சகல ஜனங்களும் மாண்டு போயினர். (ஆதி. 7 : 23)

**3.** பூமியின் மேல் ஜலம் பெருகினபோது, பறவைகள், நாட்டு மிருகங்கள் , காட்டு மிருகங்கள், ஊரும் பிராணிகள் அனைத்திற்கும் என்ன சம்பவித்தது?
அவைகள் யாவும் அழிந்து பூமியில் இராதபடி நிக்கிரகமாயின. (ஆதி. 7 : 23)

**4.** பூமியின் மேல் உண்டான ஜலப்பிரளயத்திலிருந்து யார் காக்கப்பட்டார்கள்?
நோவாவின் குடும்பமும் அவனோடே பேழையிலிருந்த உயிர்களும் மாத்திரம் காக்கப்பட்டன. (ஆதி. 7 : 23)

**5.** பூமியின் மேல் ஜலம் எத்தனை நாள் பிரவாகித்துக் கொண்டிருந்தது?
நூற்றைம்பது நாள் (ஆதி. 7 : 24)

**6.** பூமியின் மேல் ஜலம் பிரவாகித்துக் கொண்டிருந்த போது தேவன் யாரை நினைத்தருளினார்?
நோவாவையும் அவனோடே கூட பேழையிலிருந்தவர்களையும் (ஆதி. 8 : 1)

**7.** ஜலம் அமரும்படி தேவன் என்ன செய்தார்?
காற்றை வீசப்பண்ணினார். (ஆதி. 8 : 1)

**8.** நோவாவின் நாட்களிலுண்டான ஜலம் எப்பொழுது வற்றத் தொடங்கியது?
நூற்றைம்பது நாட்களுக்குப் பின்பு (ஆதி. 8 : 3)

**9.** நோவாவின் பேழை எங்கு தங்கிற்று?
அரராத் மலைகளின் மேல் (ஆதி 8 : 4)

**10.** பேழை எப்பொழுது அரராத் மலைகளில் தங்கிற்று?
ஏழாம் மாதம் பதினேழாம் தேதி (ஆதி. 8 : 4)

**11.** நோவா பேழையிலிருந்து முதலாவது எதை வெளியே விட்டான்?
காகம் (ஆதி. 8 : 7)

**12.** பூமியின் மேல் ஜலம் குறைந்து போயிற்றோ என்று அறியும்படி நோவா என்ன செய்தான்?
புறாவை வெளியே விட்டான்.(ஆதி. 8 : 8)

13. புறா பூமியிலிருந்து எதை எடுத்துக் கொண்டு வந்தது?
ஒலிவ மரத்தின் இலை (ஆதி. 8 : 11)

14. பூமி காய்ந்த பின்பு தேவன் நோவாவிடம் என்ன கூறினார்?
பேழையை விட்டுப் புறப்படுங்கள் என்றார். (ஆதி. 8 : 16)

15. பூமி காய்ந்த போது, பேழையிலிருந்து வெளியே வந்தவர்கள் யார்?
நோவாவின் குடும்பமும், பேழையிலிருந்த சகல ஜீவ ஜந்துக்களும் (ஆதி. 8 : 18, 19)

16. நோவாவையும் அவன் குடும்பத்தாரையும் ஜலப்பிரளயத்திலிருந்து காப்பாற்றியது யார்?
தேவன் (ஆதி. 8 : 20)

17. தேவன் நோவாவை ஜலப்பிரளயத்திலிருந்து காப்பாற்றினபடியால், அவன் என்ன செய்தான்?
கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டி, பலிகளைச் செலுத்தினான். (ஆதி. 8 : 20)

18. நோவா தேவனுக்கு எதை பலி செலுத்தினான்?
சுத்தமான பறவைகளிலிருந்தும் மிருகங்களிலிருந்தும் சிலவற்றை செலுத்தினான். (ஆதி. 8 : 20)

.

************

வகுப்பு : 1

பாடம்-8

# பாபேல் கோபுரம்

(ஆதியாகமம் அதிகாரம் 9:1,19; 11:1-9)

**I.** *மனப்பாட வசனம் :* (2 Marks)

நீதிமொழிகள் 16 : 25

மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு: அதின் முடிவோ மரண வழிகள்.

**II.** *போதனை* **:** (2 Marks)

தேவனுடைய திட்டத்துக்கு மாறாக நாம் ஏதாகிலும் செய்ய முயற்சித்தால் குழப்பம் உண்டாகும்.

**III.** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி* : (2 Marks)

**1.** ஜலப்பிரளயத்திற்குப்பின் தேவன் யாரை ஆசீர்வதித்து பூமியை நிரப்பும்படி கூறினார்?
தேவன் நோவாவையும் அவன் குமாரரையும் ஆசீர்வதித்து பூமியை நிரம்பும்படி கூறினார். (ஆதி 9 : 1)

**2.** ஜலப்பிரளயத்திற்குப்பின் பூமியெங்கும் எத்தனைவிதமான பாஷையும் பேச்சும் இருந்தது?
ஒரே பாஷையும், ஒரே விதமான பேச்சும் இருந்தது. (ஆதி 11 : 1)

**3.** ஜலப்பிரளயத்திற்குப்பின் ஜனங்கள் எங்கு குடியிருந்தார்கள்?
சிநெயார் தேசத்திலுள்ள சமபூமியில் குடியிருந்தார்கள். (ஆதி. 11 : 2)

**4.** ஜனங்கள் தாங்கள் பூமியின் மீதெங்கும் சிதறிப்போகாதபடிக்கு என்ன செய்ய தீர்மானித்தார்கள்?
ஜனங்கள் ஒரே நகரத்தையும், கோபுரத்தையும் கட்டத் தீர்மானித்ததர்கள். (ஆதி11 : 4)

**5.** மனுபுத்திரர் கட்டுகிற நகரத்தையும் கோபுரத்தையும் பார்க்கிறதற்கு இறங்கியது யார்?
கர்த்தர் (ஆதி. 11 : 5)

**6.** தாங்கள் செய்ய நினைத்தது தடைபடாது என்று யார் எண்ணினார்கள்?
ஜனங்கள் (ஆதி 11 : 6)

**7.** ஜனங்கள் ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறியாதபடிக்கு கர்த்தர் என்ன செய்தார்?
ஜனங்களுடைய பாஷையைத் தாறுமாறாக்கினார். (ஆதி. 11 : 7,8)

**8.** ஜனங்களால் பாபேல் நகரத்தை ஏன் கட்டமுடியாமற் போயிற்ற?
கர்த்தர் அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்கினபடியால், கட்டமுடியாமற்போயிற்று. (ஆதி 11 : 8)

**9.** கர்த்தர் பூமியெங்கும் வழங்கின பாஷையைத் தாறுமாறாக்கின இடத்தின் பெயர் என்ன?
பாபேல் (ஆதி. 11 : 9)

**10.** ஜனங்களுடைய பாஷையைத் தாறுமாறாக்கினபின்பு கர்த்தர் என்ன செய்தார்?
ஜனங்கள் பூமியின் மீதெங்கும் சிதறிப்போகப்பண்ணினார். (ஆதி. 11 : 9)

*************

வகுப்பு : 1

பாடம் - 9

# ஆபிரகாமும் லோத்தும்

(ஆதியாகமம் அதிகாரம் 12 : 1,4 ; அதி 13)

**I.** *__மனப்பாட வசனம் :__* (2 Marks)

__பிலிப்பியர் 2 : 16__

எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்.

**II.** *__போதனை__* : (2 Marks)

நாம் ஒருவரோடொருவர் சமாதானமுள்ளவர்களாக ஜீவிக்க வேண்டும்.

**III.** *__ஓரிரு வார்த்தைகளில் விடையளி__* : (2 Marks)

**1.** தேவன் தான் காண்பிக்கும் தேசத்துக்குப் போகும்படி யாரை அழைத்தார்?
ஆபிரகாமை அழைத்தார் (ஆதி. 12 : 1)

**2.** ஆபிரகாம் எந்த தேசத்தைவிட்டுப் புறப்பட்டுப்போனான்?
ஆரான் (ஆதி 12 : 4)

**3.** லோத்து யாரோடுகூட ஆரானைவிட்டுப் புறப்பட்டுப் போனான்?
ஆபிராகாமுடன் போனான் (ஆதி. 12 : 4)

**4.** ஆபிரகாமும் லோத்தும் ஏன் ஒருமித்து வாசம் பண்ணக்கூடாமற்போயிற்று?
அவர்களுடைய ஆஸ்தி மிகுதியாயிருந்தபடியால் அவர்கள் ஒருமித்து வாசம் பண்ணக்கூடாமற்போயிற்று. (ஆதி. 13 : 6))

**5.** யாருடைய மந்தை மேய்ப்பருக்கிடையே வாக்குவாதம் உண்டானது?
ஆபிரகாம், லோத்து இவர்களுடைய மந்தைமேய்ப்பருக்கிடையே வாக்குவாதம் உண்டானது. (ஆதி. 13 : 7)

**6.** நமக்குள் வாக்குவாதம் வேண்டாம். நாம் சகோதரர் - என்று லோத்திடம் கூறியது யார்?
ஆபிரகாம் (ஆதி 13 : 8)

**7.** நீ இடதுபுறம் போனால் நான் வலதுபுறம் போகிறேன் - என்று ஆபிரகாம் யாரிடம் கூறினான்?
லோத்திடம் (ஆதி 13 : 9)

**8.** ஆபிரகாமை விட்டு பிரிந்தபின்பு லோத்து வாசம் பண்ணும்படி எந்த இடத்தை தெரிந்தெடுத்தான்?
யோர்தானின் சமவெளி (ஆதி 13 : 11)

**9.** லோத்து ஆபிரகாமை விட்டு பிரிந்தபின்பு, ஆபிரகாம் எங்கே வாசம் பண்ணினான்?
கானானில் வாசம் பண்ணினான். (ஆதி 13 : 12)

**10.** லோத்தும் ஆபிரகாமும் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்தபின்பு, கர்த்தர் யாரோடு பேசினார்?
ஆபிராகாமுடன் பேசினார். (ஆதி 13 : 14)

**11.** லோத்து ஆபிரகாமை விட்டுப்பிரிந்தபின்பு, கர்த்தர் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தம் என்ன?
கானான் தேசம் முழுவதையும் ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் தருவேன் என்று வாக்குத்தத்தம் பண்ணினார். (ஆதி. 13 :14- 17)

*************

வகுப்பு : 1

பாடம் - 10

# ஆபிரகாம் லோத்தை விடுதலையாக்கினது

(ஆதியாகமம் அதிகாரம் 13 : 11-13 ; 14 : 8-16)

**I.** *<u>மனப்பாட வசனம் :</u>* (2 Marks)

<u>நீதிமொழிகள் 3 : 27</u>

நன்மைசெய்யும்படி உனக்குத் திராணியிருக்கும் போது, அதைச் செய்யத் தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே.

**II.** *<u>போதனை</u>* : (2 Marks)

மற்றவர்கள் கஷ்டத்திலிருக்கும்போது நாம் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

**III.** *<u>ஓரிரு வார்த்தைகளில் விடையளி</u>* : (2 Marks)

**1.** லோத்து ஆபிரகாமை விட்டுப் பிரிந்தபின்பு, எங்கே போய் குடியிருந்தான்?
சோதோமில் (ஆதி. 13 : 12)

**2.** சோதோமின் ஜனங்கள் எப்படிப்பட்டவர்களாயிருந்தார்கள்?
பொல்லாதவர்களும், கர்த்தருக்கு முன்பாக மகாபாவிகளுமாய் இருந்தார்கள். (ஆதி 13 : 13)

**3.** சோதோமின் ராஜாவோடு யுத்தத்திற்கு வந்தவர்கள் யார்?
ஏலாமின் ராஜாவும் வேறு மூன்று ராஜாக்களும் யுத்தத்திற்கு வந்தார்கள்.(ஆதி. 14 : 9)

**4.** சோதோமின் ராஜாவுக்கு ஆதரவாக எத்தனை ராஜாக்கள் இருந்தார்கள்?
நான்கு இராஜாக்கள் (ஆதி. 14 : 9))

**5.** யுத்தத்தில் சோதோம் கொமோராவின் ராஜாக்களுக்கு என்ன சம்பவித்தது?
முறிந்தோடி விழுந்தார்கள் (ஆதி. 14 : 10)

**6.** சோதோமில் குடியிருந்த லோத்துக்கு என்ன நேரிட்டது?
லோத்து தன் குடும்பத்தோடு சிறை பிடிக்கப்பட்டான். (ஆதி 14 : 12)

**7.** லோத்து சிறைபிடிக்கப்பட்ட செய்தி யாருக்கு அறிவிக்கப்பட்டது?
ஆபிரகாமுக்கு அறிவிக்கப்பட்டது. (ஆதி 14 : 13)

**8.** ஆபிரகாமின் வீட்டில் பயிற்சிபெற்ற வேலையாட்கள் எத்தனை பேர் இருந்தார்கள்?
முந்நூற்றுப்பதினெட்டுபேர் (ஆதி 14 : 14)

**9.** லோத்தையும் அவன் குடும்பத்தையும் ஜனங்களையும் சிறையிருப்பிலிருந்து விடுவித்துக் கொண்டுவந்தது யார்?
ஆபிரகாம். (ஆதி 14 : 16)

**10.** ஆபிரகாம் லோத்தை விடுதலையாக்கின சம்பவம் எதை வெளிப்படுத்துகிறது?
லோத்து ஆபிரகாமை விட்டு பிரிந்தபின்பும், ஆபிரகாமுக்கு லோத்தின் மீதிருந்த அன்பு மாறாமலிருந்ததை வெளிப்படுத்துகிறது. (பாடத்திட்டம்)

*************

வகுப்பு : 1

பாடம் - 11

# யோவான்ஸ்நானனின் பிறப்பு

(லூக்கா 1 : 5 - 25, 57 - 66)

**I. *மனப்பாட வசனம் :*** (2 Marks)

யோவான் 20 : 27

அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு.

**II. *போதனை* :** (2 Marks)

நாம் தேவனுடைய வார்த்தையைச் சந்தேகிக்கக் கூடாது.

**III. *ஓரிரு வார்த்தைகளில் விடையளி* :** (2 Marks)

**1.** யோவான்ஸ்நானனின் பெற்றோர்கள் யார்?
சகரியா, எலிசபெத். (லூக் 1 : 5)

**2.** சகரியாவும், எலிசபெத்தும் எப்படிப்பட்டவர்களாயிருந்தார்கள்?
தேவபக்தியுள்ளவர்களாயும், தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயும், குற்றமற்றவர்களாயும் இருந்தார்கள். (லூக் 1 : 6)

**3.** சகரியா தேவாலயத்துக்குள் சென்று தூபம் காட்டும்போது அவனுக்கு தரிசனமானது யார்?
காபிரியேல் என்னும் கர்த்தருடைய தூதன். (லூக் 1 : 13, 19)

**4.** தேவதூதன் சகரியாக்கு கொடுத்த செய்தி என்ன?
உன் மனைவியாகிய எலிசபெத்து ஒரு குமாரனைப் பெறுவாள். அவனுக்கு யோவான் என்று பேரிடுவாயாக என்றான். (லூக் 1 : 13)

**5.** தேவனுடைய வார்த்தையை நம்பாமலிருந்த ஆசாரியன் யார்?
சகரியா (லூக் 1 : 18)

**6.** தேவனுடைய வார்த்தையை நம்பாமல், சகரியா தேவதூதனாகிய காபிரியேலிடம் என்ன சொன்னான்?
நான் கிழவனாயிருக்கிறேன். என் மனைவியும் வயது சென்றவளாயிருக்கிறாளே என்று கூறினான். (லூக் 1 : 18)

**7.** தேவனுடைய வார்த்தையை விசுவாசியாதபடியினால், ஊமையான ஆசாரியன் யார்?
சகரியா (லூக் 1 : 20)

**8.** தூதன் முன்னறிவித்தபடி சகரியா பிள்ளைக்கு என்ன பெயரிட்டான்?
யோவான். (லூக் 1 : 63)

**9.** சகரியாவின் வாய் எப்போது திறக்கப்பட்டது?
பிள்ளைக்கு யோவான் என்று பெயரிடவேண்டும் என்று ஒரு எழுத்துப்பலகையில் எழுதிக் காண்பித்தான். உடனே அவனுடைய வாய் திறக்கப்பட்டது. (லூக் 1 : 63)

**10.** சகரியாவின் வாய் திறக்கப்பட்டவுடன், அவன் என்ன செய்தான்?
தேவனை ஸ்தோத்தரித்துப் பேசினான். (லூக் 1 : 64)

************

# கர்த்தராகிய இயேசுவின் பிறப்பு

(லூக்கா 2 : 1 - 20)

**I.** ***மனப்பாட வசனம் :*** (2 Marks)

1 தீமோத்தேயு 1 : 15

பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்.

**II.** ***போதனை :*** (2 Marks)

மேய்ப்பர்களைப் போல நாம் தாழ்மையுள்ளவர்களாயிருந்தால், நாமும் கர்த்தராகிய இயேசுவைக் காணக்கூடியவர்களாயிருப்போம்.

**III.** ***ஓரிரு வார்த்தைகளில் விடையளி :*** (2 Marks)

1. யோசேப்பும் மரியாளும் எந்த ஊரில் வசித்துவந்தார்கள்?
   நாசரேத்து (லூக் 2 : 4)
2. யோசேப்பும் மரியாளும் குடிமதிப்பெழுதப்படும்படிக்கு எந்த ஊருக்குப் போனார்கள்?
   பெத்லகேம் (லூக். 2 : 5)
3. சத்திரத்தில் இடமில்லாதபடியினால் மரியாள் பிள்ளையை எங்கே கிடத்தினாள்?
   துணிகளில் சுற்றி முன்னணையில் கிடத்தினாள். (லூக். 2 : 7)
4. இராத்திரியிலே மேய்ப்பர்களில் சிலர் வயல்வெளியில் தங்கி என்ன செய்து கொண்டிருந்தார்கள்?
   மந்தையைக் காத்துக் கொண்டிருந்தார்கள். (லூக். 2 : 8)
5. கர்த்தராகிய இயேசுவின் பிறப்பைப் பற்றி மேய்ப்பர்களுக்கு அறிவித்தது யார்?
   தேவதூதன் (லூக். 2 : 9,10)
6. எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி என தேவதூதன் மேய்ப்பர்களுக்கு அறிவித்த செய்தி என்ன?
   கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்.(லூக்.2: 11)
7. தேவதூதன் இயேசுவின் பிறப்பைப்பற்றி அறிவித்தபோது பரமசேனையின் திரள் அவனுடனே தோன்றி என்ன செய்தனர்?
   தேவனைத் துதித்தனர். (லூக். 2 : 13, 14)
8. தீவிரமாய் பெத்லகேமிற்கு வந்து இயேசுவை கண்டது யார்?
   மேய்ப்பர்கள் (லூக். 2 : 15,16)
9. மேய்ப்பராலே சொல்லப்பட்ட சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்திலே வைத்து சிந்தனை பண்ணியது யார்?
   மரியாள் (லூக். 2 : 18)
10. மேய்ப்பர்கள் பிள்ளையாகிய இயேசுவைக்கண்ட பின்பு என்ன செய்தார்கள்?
    தேவனை மகிமைப்படுத்தி, துதித்துக் கொண்டு திரும்பிப்போனார்கள். (லூக். 2 : 20)

*************

வகுப்பு : 1

பாடம்-13

# பாலகனாகிய இயேசு தேவாலயத்திற்குக் கொண்டுபோகப்பட்டது

(லூக்கா 2 : 21 - 39)

**I.** ***மனப்பாட வசனம் :*** (2 Marks)

லூக்கா 2 : 32

உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது.

**II.** ***போதனை :*** (2 Marks)

கர்த்தராகிய இயேசுவைக் காண வேண்டும் என்ற வாஞ்சை நமக்கு இருக்க வேண்டும்.

**III.** ***ஓரிரு வார்த்தைகளில் விடையளி :*** (2 Marks)

**1.** யோசேப்பும் மரியாளும் பாலகனாகிய இயேசுவை எங்கு கொண்டுபோனார்கள்?
எருசலேமுக்கு கொண்டு போனார்கள். (லூக் 2 : 24)

**2.** யோசேப்பும் மரியாளும் பாலகனாகிய இயேசுவை எருசலேமுக்கு ஏன் கொண்டு போனார்கள்?
*(i)* இயேசுவை கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுக்கவும்.
*(ii)* நியாயப்பிரமாணத்தின்படி பலிசெலுத்தவும் கொண்டு போனார்கள்.
(லூக். 2 : 23, 24)

**3.** எருசலேமில் இருந்த நீதியும் தேவபக்தியும் உள்ள மனுஷன் யார்?
சிமியோன் (லூக். 2 : 25)

**4.** பாலகனாகிய இயேசுவை எருசலேமிலுள்ள ஆலயத்திற்கு கொண்டுபோனபோது அங்கிருந்த யார் மேல பரிசுத்த ஆவியானவர் இருந்தார்? அவன் எதற்காக காத்திருக்கிறவனாய் இருந்தான்?
*(i)* சிமியோன்
*(ii)* அவன் இஸ்ரவேலின் ஆறுதல் வர காத்திருக்கிறவனாய் இருந்தான். (லூக்.2:25)

**5.** பரிசுத்த ஆவியானவர் சிமியோனுக்கு என்ன அறிவித்திருந்தார்?
"கர்த்தருடைய கிறிஸ்துவை காணுமுன்னே மரணமடையமாட்டாய்" என்று அறிவித்திருந்தார். (லூக். 2 : 26)

**6.** ஆவியானவர் ஏவுதலினால் தேவாலயத்திற்கு வந்து பாலகனாகிய இயேசுவை தரிசித்தது யார்?
சிமியோன் (லூக். 2 : 27 - 32)

**7.** பாலகனாகிய இயேசுவை கொண்டு வந்தபோது தேவாலயத்தில் இருந்த தீர்க்கதரிசி யார்?
அன்னாள் (லூக். 2 : 36)

**8.** தேவாலயத்தை விட்டு நீங்காமல் இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம்பண்ணி, ஆராதனை செய்து கொண்டிருந்த விதவை யார்?
அன்னாள் (லூக். 2 : 37)

**9.** எருசலேமிலே மீட்புண்டாகக் காத்திருந்த யாவருக்கும் இயேசுவைக் குறித்து பேசியது யார்?
அன்னாள் (லூக். 2 : 38)

**10.** யாருடைய பிறப்பு சந்தோசத்தையும் ஆறுதலையும் கொண்டு வந்தது?
கர்த்தராகிய இயேசுவின் பிறப்பு (பாடத்திட்டம்)

**11.** கர்த்தராகிய இயேசுவை நம்முடைய இருதயங்களில் ஏற்றுக்கொள்ளும்போது, நாம் பெறும் நன்மை என்ன?
சமாதானமும், மகிழ்ச்சியும் கிடைக்கும். (பாடத்திட்டம்)

*************

வகுப்பு : 1

பாடம் -14

# சாஸ்திரிகள் பாலகனாகிய இயேசுவைத் தரிசித்தது

(மத்தேயு 2 : 1 - 12)

**I.** *__மனப்பாட வசனம் :__* (2 Marks)

ஏசாயா 9 : 2
இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்.

**II.** *__போதனை :__* (2 Marks)

கர்த்தராகிய இயேசு யூதருக்கு மாத்திரமல்ல, புறஜாதியாருக்கும் இரட்சகராக வெளிப்பட்டார்.

**III.** *__ஓரிரு வார்த்தைகளில் விடையளி :__* (2 Marks)

**1.** கிழக்கிலே ஒரு புதிய நட்சத்திரம் எப்போது தோன்றியது?
கர்த்தராகிய இயேசு பிறந்தபொழுது. (மத் 2 : 1, 2)

**2.** எருசலேமுக்கு வந்து யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே என்று வினாவியது யார்?
சாஸ்திரிகள் (மத் 2 : 2)

**3.** இயேசு பிறந்திருக்கிறார் என்று கேள்விப்பட்ட போது ஏரோதும் எருசலேம் நகரத்தார் யாவரும் என்ன செய்தார்கள்?
கலங்கினார்கள் (மத் 2 : 3)

**4.** யூதருக்கு ராஜாவாக பிறந்தவர் யார்?
இயேசு (மத் 2 : 2)

**5.** ஏரோது யூதருக்கு ராஜா பெத்லகேமில் பிறப்பாரென்று யார் மூலமாக அறிந்து கொண்டான்?
பிரதான ஆசாரியர், வேதபாரகர் மூலமாக அறிந்துகொண்டான். (மத் 2 : 4,5)

**6.** கர்த்தராகிய இயேசுவைக் கண்ட பின்பு தனக்கு அறிவிக்க வேண்டும் என்று சாஸ்திரிகளிடம் கூறியது யார்?
ஏரோது (மத் 2 : 8)

**7.** சாஸ்திரிகள் பிள்ளை இருந்த இடத்திற்கு நடத்திக் கொண்டு சென்றது யார்?
நட்சத்திரம் (மத் 2 : 9)

**8.** சாஸ்திரிகள் பிள்ளைக்கு என்ன காணிக்கை செலுத்தினார்கள்?
பொன், தூபவர்க்கம், வெள்ளைப்போளம். (மத் 2 : 11)

**9.** நட்சத்திரத்தினால் வழிநடத்தப்பட்டு,, இயேசுவைக் கண்டு சாஷ்டாங்கமாய் விழுந்து அவரைப் பணிந்து கொண்டது யார்?
சாஸ்திரிகள் (மத் 2 : 11)

**10.** ஏரோதிடம் திரும்பிச் செல்ல வேண்டாமென்று சாஸ்திரிகளை எச்சரித்தது யார்?
தேவன் (மத் 2 : 12)

*************

வகுப்பு : 1

பாடம் -15

# பாலகனாகிய இயேசு எகிப்துக்குக் கொண்டுபோகப்பட்டது

(மத்தேயு 2 : 13 - 23)

**I.** *மனப்பாட வசனம் :* (2 Marks)

சங்கீதம் 91 : 11

உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்.

**II.** *போதனை* **:** (2 Marks)

நம்மைச் சகலவித ஆபத்துகளிலிருந்தும் பாதுகாப்பதற்காகத் தேவன் தம்முடைய தூதர்களை வைத்திருக்கிறார்.

**III.** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி* : (2 Marks)

**1.** ஏரோது பிள்ளையை கொலை செய்யத்தேடுகிறான் என்று யோசேப்புக்கு அறிவித்தது யார்?
கர்த்தருடைய தூதன் (மத் 2 : 13)

**2.** பிள்ளையையும் அதன் தாயையும் கூட்டிக்கொண்டு எங்கே போகும்படி தூதன் யோசேப்பிடம் சொன்னான்?
ஏகிப்துக்கு (மத் 2 : 13)

**3.** யோசேப்பு எவ்வளவு நாள் எகிப்திலே இருந்தான்?
ஏரோதின் மரணபரியந்தம் அங்கே இருந்தான். (மத் 2 : 14, 15)

**4.** ஏரோது தான் சாஸ்திரிகளால் வஞ்சிக்கப்பட்டதை அறிந்தபோது என்ன செய்தான்?
இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண்பிள்ளைகளையும் கொலை செய்தான்.(மத்2: 16)

**5.** ஏரோது மரணமடைந்தான் என்று யோசேப்புக்கு அறிவித்தது யார்?
கர்த்தருடைய தூதன் (மத் 2 : 19)

**6.** ஏரோது மரித்தபின்பு யோசேப்பு என்ன செய்தான்?
பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு இஸ்ரவேல் தேசத்திற்கு வந்தான். (மத் 2 : 21)

**7.** ஏரோதின் மகன் யார்?
அர்கெலாயு (மத் 2 : 22)

**8.** அர்கெலாயு அரசாளுகிறான் என்று கேள்விப்பட்டபோது யோசேப்பு என்ன செய்தான்?
அங்கே போக பயந்தான். (மத் 2 : 22)

**9.** இரண்டாம் முறை சொப்பனத்தில் தேவனால் எச்சரிக்கப்பட்டபோது, யோசேப்பு என்ன செய்தான்?
நாசரேத்து என்னும் ஊரில் சென்று வசித்தான். (மத் 2 : 23)

**10.** கர்த்தராகிய இயேசு நசரேயன் என்று ஏன் அழைக்கப்பட்டார்?
நாசரேத்து என்னும் ஊரில் வாசம்பண்ணினபடியால், அவ்வாறு அழைக்கப்பட்டார். (மத் 2 : 2, 3)

*************

வகுப்பு : 1

பாடம்-16

# எருசலேமில் இளைஞரான இயேசு

(லூாக்கா 2 : 41 - 52)

**I.** *மனப்பாட வசனம் :* (2 Marks)

லூாக்கா 2 : 52

இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகதிகமாய் விருத்தியடைந்தார்.

**II.** *போதனை :* (2 Marks)

தேவனுடைய வசனம் நம்மை ஞானவான்களாக்குகிறது.

**III.** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி :* (2 Marks)

1. இயேசு பஸ்கா பண்டிகையை ஆசரிக்கும்படி எங்கே போனார்?
   எருசலேமுக்குப் போனார். (லூாக் 2 : 41)

2. இயேசுவானவர் எந்த வயதில் பஸ்காவை ஆசரிக்கும்படி எருசலேமுக்குப் போனார்?
   பன்னிரண்டாவது வயதில் போனார். (லூாக். 2 : 42)

3. பண்டிகை முடிந்து இயேசுவின் பெற்றோர் திரும்பி வந்தபோது, இயேசு என்ன செய்தார்?
   எருசலேமில் இருந்துவிட்டார். (லூாக். 2 : 43)

4. இயேசுவின் பெற்றோர் இயேசுவை எங்கே தேடினார்கள்?
   உறவின்முறையாரிடத்திலும் அறிமுகமானவர்களிடத்திலும் தேடினார்கள். (லூாக். 2 : 44)

5. இயேசுவை காணாததினால் அவருடைய பெற்றோர்கள் என்ன செய்தார்கள்?
   எருசலேமுக்குத் திரும்பிப்போனார்கள். (லூாக். 2 : 45)

6. மூன்று நாட்களுக்குப்பின்பு, இயேசுவின் பெற்றோர் அவரை எங்கே கண்டார்கள்?
   அவர் தேவாலயத்தில் போதகர் நடுவில் உட்கார்ந்திருக்கவும், அவர்கள் பேசுகிறதைக் கேட்கவும் அவர்களிடத்தில் வினாவவும் கண்டார்கள். (லூாக். 2 : 46)

7. பன்னிரண்டாம் வயதில் போதகர்கள் நடுவில் அமர்ந்து பரலோக இராஜ்யத்தைக்குறித்து சம்பாஷித்தது யார்?
   இயேசு (லூாக். 2 : 42, 46)

8. இயேசுவானவர் பேசுகிறதைக் கேட்டவர்கள் எதைக்குறித்து பிரமித்தார்கள்?
   அவருடைய புத்தியையும் அவர் சொன்ன மாறுத்தரங்களையும் குறித்துப் பிரமித்தார்கள். (லூாக். 2 : 47)

9. இயேசுவைக் கண்டபோது, அவருடைய தாயார் அவரிடத்தில் என்ன கேட்டார்கள்?
   மகனே! ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்? இதோ, உன் தகப்பனும் நானும் விசாரத்தோடே உன்னைத் தேடினோமே என்று கேட்டார்கள். (லூாக். 2 : 48)

10. இயேசு தன்னைத் தேடிவந்த தன்னுடைய தாயாருக்குக் கொடுத்த மறுமொழி என்ன?
    "நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்கவேண்டியதென்று அறியீர்களா" என்று கேட்டார். (லூாக். 2 : 49)

11. இயேசு எருசலேமிலிருந்து தன் பெற்றோருடன் எங்கே சென்று அவர்களுக்கு கீழ்ப்படிந்திருந்தார்?
    நாசரேத் ( லூாக். 2 : 51)

12. இயேசு யாருக்கு கீழ்ப்படிந்திருந்தார்?
    தன் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்திருந்தார் ( லூாக். 2 : 51)

13. இயேசு அதிகமதிகமாய் எவற்றில் விருத்தியடைந்தமார்?
    ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் விருத்தியடைந்தார். (லூாக். 2 : 52)

*************

வகுப்பு : 1

பாடம் -17

# கர்த்தராகிய இயேசு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டது

(யோவான்ஸ்நானனின் ஊழியம்)

(மாற்கு 1 : 2-6, மத்தேயு 3 : 13 - 17)

**I.** *மனப்பாட வசனம் :* (2 Marks)

நீதிமொழிகள் 12 : 28

நீதியின் பாதையில் ஜீவன் உண்டு.

**II.** *போதனை :* (2 Marks)

நாம் தேவசித்தம் செய்யும்போது, தேவன் நம்மில் பிரியப்படுவார்.

**III.** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி :* (2 Marks)

**1.** யோவான்ஸ்நானன் என்பவர் யார்?

கர்த்தராகிய இயேசுவுக்கு வழியை ஆயத்தம்பண்ணும்படி அனுப்பப்பட்ட ஒரு தூதன் (மாற்கு 1 : 2)

**2.** யோவான்ஸ்நானன் தரித்திருந்த உடை என்ன?

யோவான்ஸ்நானன் ஒட்டகமயிர் உடையைத் தரித்து, தன் அரையில் வார்க்கச்சையைக் கட்டியிருந்தான். (மத்தேயு 3 : 4)

**3.** யோவான்ஸ்நானன் என்ன புசித்தான்?

வெட்டுக்கிளியும், காட்டுத்தேனும் புசித்தான். (மத் 3 : 4)

**4.** யோவான்ஸ்நானன் எதைக்குறித்து எங்கே பிரசங்கம் பண்ணினான்?

பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக் குறித்து வனாந்தரத்தில் பிரசங்கம் பண்ணினான். (மாற்கு 1 : 4)

**5.** யோவான்ஸ்நானன் எங்கே ஞானஸ்நானம் கொடுத்தான்?

யோர்தான் நதியில் ஞானஸ்நானம் கொடுத்தான். (மாற்கு 1 : 5)

**6.** யோவான் யோவான்ஸ்நானன் என்று ஏன் அழைக்கப்பட்டான்?

அவன் ஞானஸ்நானம் கொடுக்கும்படி அனுப்பப்பட்டதால் இப்பெயரால் அழைக்கப்பட்டான். (பாடத்திட்டம்)

**7.** கர்த்தராகிய இயேசு ஏன் யோவானிடம் வந்தார்?

யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு அவனிடம் வந்தார். (மத்தேயு 3 : 13)

**8.** இயேசு யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு வந்தபோது, அவன் இயேசுவிடம் என்ன சொன்னான்?

யோவான் அவருக்குத் தடைசெய்து நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க நீர் என்னிடத்தில் வரலாமா என்றான். (மத்தேயு 3 : 14)

**9.** "எல்லா நிதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது" என்று யார் யாரிடம் கூறினார்?

கர்த்தராகிய இயேசு யோவான்ஸ்நானனிடம் கூறினார். (மத்தேயு 3 : 15)

**10.** கர்த்தராகிய இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுத்தது யார்?

யோவான்ஸ்நானகன் (மத் 3 : 15)

**11.** இயேசு ஞானஸ்நானம் பெற்று கரையேறினவுடனே கண்ட காட்சி என்ன?

இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது. தேவ ஆவி புறாவைப்போல் இறங்கி தம்மேல் வருகிறதைக் கண்டார். (மத் 3 : 16)

**12.** இயேசு ஞானஸ்நானம் பெற்று கரையேறினபோது, வானத்திலிருந்து உண்டான சத்தம் என்ன உரைத்தது?

"இவர் என்னுடையநேசகுமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்று உரைத்தது. (மத்3:17)

*************

வகுப்பு : 1

பாடம் -18

# கர்த்தராகிய இயேசு வனாந்தரத்தில் சோதிக்கப்பட்டது

(மத்தேயு 4 : 1 - 11)

**I.** ***மனப்பாட வசனம் :*** (2 Marks)

யாக்கோபு 4 : 7

பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்

**II.** ***போதனை :*** (2 Marks)

கர்த்தராகிய இயேசு எப்படிப் பிசாசையும் அவனுடைய சோதனைகளையும் ஜெயித்தாரோ, அப்படியே நாமும் பிசாசை ஜெயிக்கவேண்டும்.

**III.** ***ஓரிரு வார்த்தைகளில் விடையளி :*** (2 Marks)

**1.** கர்த்தராகிய இயேசுவை சோதித்தது யார்?
பிசாசு (மத்தேயு 4 : 1)

**2.** கர்த்தராகிய இயேசு சோதிக்கப்படும்படி எங்கே கொண்டுபோகப்பட்டார்?
வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டார். (மத் 4 : 1)

**3.** கர்த்தராகிய இயேசு சோதிக்கப்படும்படி யாரால் வனாந்தரத்திற்கு கொண்டுபோகப்பட்டார்?
ஆவியானவரால் கொண்டுபோகப்பட்டார். (மத் 4 : 1)

**4.** கர்த்தராகிய இயேசு எத்தனை நாள் உபவாசமிருந்தார்?
இரவும் பகலும் நாற்பது நாள்.. (மத் 4 : 2)

**5.** கர்த்தராகிய இயேசுவுக்கு எப்போது பசியுண்டாயிற்று?
இரவும் பகலும் நாற்பது நாள் உபவாசமிருந்தபின்பு அவருக்குப் பசியுண்டாயிற்று. (மத்4:2)

**6.** கர்த்தராகிய இயேசுவுக்கு வந்த முதல் சோதனை என்ன?
சோதனைக்காரன் அவரிடம், ‘‘நீர் தேவனுடைய குமாரனேயானால் இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும’’ என்றான். (மத் 4 : 3)

**7.** இயேசு தனக்கு வந்த முதலாவது சோதனையை எவ்வாறு ஜெயித்தார்?
இயேசு சோதனைக்காரனிடம், ‘‘மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வார்த்தையினாலும் பிழைப்பான்’’ என்று சொல்லி ஜெயித்தார். (மத் 4 : 4)

**8.** கர்த்தராகிய இயேசுவுக்கு வந்த இரண்டாவது சோதனை என்ன?
பிசாசு இயேசுவை தேவாலயத்து உப்பரிகையின் மேல் நிறுத்தி, ‘‘நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும்’’ என்றான் (மத் 4 : 6)

**9.** கர்த்தராகிய இயேசு இரண்டாவது சோதனையை என்ன கூறி ஜெயித்தார்?
‘‘உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக’’ என்று சொல்லி ஜெயித்தார். (மத் 4 : 7)

**10.** பிசாசு இயேசுவுக்கு என்ன காண்பித்தான்?
உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் காண்பித்தான். (மத் 4 : 8)

**11.** இயேசுவுக்கு வந்த மூன்றாவது சோதனை என்ன?
பிசாசு இயேசுவிடம், ‘‘நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து என்னைப் பணிந்துகொண்டால், உலகத்தின் ராஜ்யங்களையும், அவைகளின் மகிமையையும் உமக்குத் தருவேன்’’ என்றான். (மத்4:9)

**12.** இயேசு தனக்கு வந்த மூன்றாவது சோதனையை எவ்வாறு ஜெயித்தார்?
இயேசு, ‘‘அப்பாலே போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே’’ என்று சொல்லி ஜெயித்தார். (மத்தேயு 4 : 10)

**13.** இயேசு பிசாசை ஜெயிக்கும்படி உபயோகித்த ஆயுதம் என்ன?
தேவனுடைய வார்த்தை.

*************

வகுப்பு : 1

பாடம் -19

# கானாவூர் கலியாணம்

(யோவான் 2 : 1 - 11)

**I.** *மனப்பாட வசனம் :* (2 Marks)

சங்கீதம் 34 : 10

சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும், கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங்குறைவுபடாது.

**II.** *போதனை* **:** (2 Marks)

நமக்குத் தேவைகள் ஏற்படும்போது கர்த்தர் உதவி செய்கிறார்.

**III.** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி :* (2 Marks)

**1.** எந்த ஊரில் நடந்த கலியாணத்திற்கு இயேசுவும் அவருடைய சீஷரும் அழைக்கப்பட்டிருந்தார்கள்?
கலிலேயாவிலிருந்த கானாவூர். (யோ 2 : 1)

**2.** கானாஊரிலே நடந்த கலியாணத்திற்கு யார் அழைக்கப்பட்டிருந்தார்கள்?
இயேசுவும் அவருடைய சீஷரும். (யோ 2 : 2)

**3.** திராட்சரசம் குறைவு பட்டபோது இயேசுவின் தாய் என்ன செய்தார்கள்?
கர்த்தராகிய இயேசுவிடம் அதை அறிவித்தார்கள். (யோ 2 : 3)

**4.** "திராட்சரசம் இல்லை" என்று இயேசுவின் தாய், அவரிடம் அறிவித்தபோது, இயேசு என்ன சொன்னார்?
இயேசு ஸ்திரியே, எனக்கும் உனக்கும் என்ன, என் வேளை இன்னும் வரவில்லை என்றார். (யோ 2 : 4)

**5.** திராட்சரசம் குறைவுபட்டபோது, இயேசுவின் தாய் வேலைக்காரரிடம் என்ன சொன்னாள்?
"அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்கள்" என்றாள். (யோ2:5)

**6.** திராட்சரசம் குறைவுபட்டபோது, இயேசு வேலைக்காரரிடம் என்ன சொன்னார்?
அங்கிருந்த ஆறு கற்சாடிகளில் தண்ணீர் நிரப்பும்படி கூறினார். (யோ 2 : 6,7)

**7.** கானாவூர் கல்யாண வீட்டில் எத்தனை கற்சாடிகள் இருந்தது?
ஒவ்வொன்றும் இரண்டு மூன்று குடம் தண்ணீர் கொள்ளத்தக்க ஆறு கற்சாடிகள்.(யோ2:6)

**8.** வேலைக்காரர்கள் கற்சாடிகளில் தண்ணீர் நிரப்பியபின்பு, இயேசு அவர்களுக்கு என்ன கட்டளை கொடுத்தார்?
"நீங்கள் இப்பொழுது மொண்டு, பந்திவிசாரிப்புக்காரனிடத்தில் கொண்டு போங்கள்" என்றார். (யோ 2 : 8)

**9.** கானாவூர் கல்யாணவீட்டில் தண்ணீரை திராட்சரசமாக மாற்றியது யார்?
கர்த்தராகிய இயேசு (யோ 2 : 9)

**10.** இயேசு தண்ணீரை திராட்சரசமாய் மாற்றினார் என்று யாருக்குத் தெரிந்தது? யாருக்குத் தெரியவில்லை?
1. வேலைக்காரருக்குத் தெரிந்தது. 2. பந்திவிசாரிப்புக் காரனுக்குத் தெரியவில்லை.(யோ 2 : 9)

**11.** கானாவூர் கல்யாணவீட்டிலிருந்த பந்திவிசாரிப்புக்காரன் மணவாளனிடம் என்ன சொன்னார்?
எந்த மனுஷனும் முன்பு நல்ல திராட்சரசத்தைக் கொடுத்து, ஜனங்கள் திருப்தியடைந்தபின்பு, ருசி குறைந்ததைக் கொடுப்பான், நீரோ நல்ல ரசத்தை இதுவரைக்கும் வைத்திருந்தீரே என்றான். (யோ 2 : 10)

**12.** கர்த்தராகிய இயேசு முதலாவது அற்புதத்தை எங்கே செய்தார்?
கானாவூர் கல்யாணவீட்டில் (யோ 2 : 11)

**13.** சீஷர்கள் இயேசு செய்த முதலாவது அற்புதத்தைக் கண்டபோது என்ன செய்தார்கள்?
இயேசுவினிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். (யோ 2 : 11)

*************

வகுப்பு : 1

பாடம் -20

# கர்த்தராகிய இயேசு தேவாலயத்தைச் சுத்திகரித்தது

(யோவான் 2 : 13 - 17)

**I.** ***மனப்பாட வசனம் :*** (2 Marks)

மத்தேயு 5 : 8
இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.

**II.** ***போதனை :*** (2 Marks)

நம் இருதயங்கள் எப்போதும் சுத்தமாகக் காணப்படவேண்டும் என்று கர்த்தராகிய இயேசு விரும்புகிறார்.

**III.** ***ஓரிரு வார்த்தைகளில் விடையளி :*** (2 Marks)

**1.** யூதருடைய பஸ்காபண்டிகை சமீபமானபோது, இயேசு எங்கே போனார்?
எருசலேமுக்குப்போனார். (யோ 2 :13)

**2.** எருசலேமின் தேவாலயத்திலே இயேசு கண்ட காட்சி என்ன?
தேவாலயத்திலே ஆடுகள், மாடுகள், புறாக்கள் ஆகியவற்றை விற்கிறவர்களையும், காசுக்காரரையும் கண்டார். (யோ 2 : 14)

**3.** இயேசு தேவாலயத்திலே ஆடுகள், மாடுகள் விற்கிறவர்களைக் கண்டபோது என்ன செய்தார்?
அவர்கள் யாவரையும், ஆடு, மாடுகளையும் தேவாலயத்துக்குப் புறம்பே துரத்திவிட்டார். (யோ 2 : 15)

**4.** இயேசு தேவலாயத்திலே இருந்த காசுக்காரர்களை என்ன செய்தார்?
காசுக்காரருடைய காசுகளைக் கொட்டி, பலகைகளைக் கவிழ்த்துப்போட்டார். (யோ 2 : 15)

**5.** இயேசு தேவாலயத்திலே புறாவிற்கிறவர்களை எவ்வாறு கடிந்து கொண்டார்?
இவைகளை இவ்விடத்திலிருந்து எடுத்துக்கொண்டு போங்கள். என் பிதாவின் வீட்டை வியாபார வீடாக்காதிருங்கள் என்று கடிந்து கொண்டார். (யோ 2 : 16)

**6.** இயேசு தேவாலயத்தை சுத்திகரித்ததைக் கண்டபோது, அவருடைய சீஷர்கள் எதை நினைவுகூர்ந்தார்கள்?
அவருடைய பக்திவைராக்கியத்தைக் குறித்துச் சொல்லப்பட்டிருப்பதை நினைவு கூர்ந்தார்கள். (யோ 2 : 17)

*************